## 10. தலைப்பு 8 – தேசிய பொலிஸ் ஆணைக்குழு

### 10.1 புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் பேணப்படாமை

அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 5.2.1 வழிகாட்டியின் பிரகாரம் கேள்வி கோரல் பதிவேடு ஒன்று பேணப்பட்டிருக்கவில்லை.

### 10.2 ஒதுக்கீட்டுக் கணக்கு

**பாதீட்டு முரண்கள்**

செலவின விடயமொன்றிற்காக மிகையான நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டமையின் காரணமாக நிதியேற்பாட்டைப் பயன்படுத்தியதன் பின்னரான சேமிப்பு ரூபா 911,002 அல்லது தேறிய நிதியேற்பாட்டின் 20 சதவீத அளவைக் கொண்டிருந்தது.

### 10.3 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

#### 10.3.1 வருடாந்த கொள்வனவுத் திட்டம்

2006 மார்ச் 24 ஆந் திகதிய 128 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின் பிரகாரம் வருடாந்த கொள்வனவுத் திட்டம் 2014 திசெம்பர் 31 ஆந் திகதியளவிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

#### 10.3.2 உள்ளகக் கணக்காய்வு

தேசிய பொலீஸ் ஆணைக்குழுவினால் உள்ளகக் கணக்காய்வுக் கூறு ஒன்று அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

#### 10.3.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு

தேசிய பொலிஸ் ஆணைக்குழுவினால் மீளாய்வாண்டின்போது கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

### 10.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

2014 ஆம் ஆண்டிற்குரிய பொருள் மெய்மையாய்வு அறிக்கைகளில் சுட்டிக் காண்பிக்கப்பட்ட பிரகாரம் பயன்பாட்டிற்கு எடுக்க முடியாத பொருட்கள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 770(2) மற்றும் 771(3) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

## 10.5 செயலாற்றல்

---

**முறைப்பாடுகளின் விசாரணை**

---

தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் 11 அலுவலகங்களுக்கு மீளாய்வாண்டின் போது பின்வரும் 483 முறைப்பாடுகள் கிடைத்திருந்தன.

| | முறைப்பாட்டின் தன்மை | முறைப்பாடுகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| (அ) | பொலிஸினால் நடவடிக்கை எடுக்கப்படாமை (உதாசீனம்) | 206 |
| (ஆ) | அதிகாரத் துஷ்பிரயோகம் | 97 |
| (இ) | பக்கச் சார்பு | 127 |
| (ஈ) | ஏனைய | 17 |
| (உ) | தாக்குதல் | 12 |
| (ஊ) | சட்டவிரோதமாகத் தடுத்து வைத்தல் | 04 |
| (எ) | பொய்க் குற்றச்சாட்டு/ கைது செய்தல் | 15 |
| (ஏ) | துன்புறுத்துதல் | 01 |
| (ஐ) | மகளிருக்கும் சிறுவர்களுக்கும் துன்புறுத்துதல் | 01 |
| (ஒ) | இலஞ்ச ஊழல் | 02 |
| (ஓ) | பொலிஸ் கைதில் இருக்கையில் மரணமடைதல் | 01 |
| | மொத்தம் | 483 |

மீளாய்வாண்டின்போது அந்த 426 முறைப்பாடுகளில் அதாவது 88 சதவீதம் தீர்க்கப்பட்டதாக அறிக்கையிடப்பட்டிருந்தது. பொலிஸ் ஆணைக்குழு நேரடியாகத் தலையிட்டுத் தீர்வு செய்யப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை 426 ஆக இருந்துதுடன் ஏனைய தீர்வுகள் தொடர்பான விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(i) முறைப்பாட்டாளர்களினால் முறைப்பாடுகள் கேட்டு விலக்கிக் கொள்ளப்பட்டமை.

(ii) முறைப்பாட்டாளர் விசாரணைக்கு சமூகமளிப்பதற்காக தொடர்ச்சியாக வருகை தராமை.

(iii) விசாரணையின்போது நீதிமன்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தமை வெளிப்படுத்தப்பட்டமை.

(iv) விசாரணையின்போது பொலிஸ் உள்ளபடியான பிரகாரம் நடவடிக்கை எடுத்திருந்தமை வெளிப்படுத்தப்பட்டமை.

(v) தேசிய பொலிஸ் ஆணைக்குழு மூலம் அறிக்கை கோரப்படும்போது பொலிஸ் உத்தியோகத்தர்கள் பிழையாக செயற்பட்டிருந்தமை வெளிப்படுத்தப்பட்டதனால் பொலிஸ் மூலமே ஒழுக்காற்று நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டமை.

(vi) பொலிஸ் நடவடிக்கைகள் தாமதடையும்போது தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் விசாரணையினால் விசாரணை நடவடிக்கைகளைத் துரிதப்படுத்தி பொலிஸ் ஊடாக தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்.

(vii) தரப்பினர்களின் பொலிஸில் இணக்கப்பாட்டிற்கு வந்ததாக விசாரணையின் போது வெளிப்படுத்தப்பட்டமை.

(viii) விசாரணைகளின்போது முறைப்பாடுகள் தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் விடயப்பரப்பிற்கு உட்படாதிருந்தமை வெளிப்படுத்தப்பட்டமை.

(ix) விசாரணைகளின்போது முறைப்பாடுகளை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக சான்றுகள் சமர்ப்பிக்கப்படாமை.

(x) முறைப்பாட்டாளர்கள் சேர்ந்து முறைப்பாடுகளை பொலிஸ்மா அதிபர் உட்பட ஏனைய அதிகாரத் தரப்பினர்களுக்குச் சமர்ப்பித்திருந்த சந்தர்ப்பங்களின் போது அந்த அதிகாரத்தரப்பினர் நடவடிக்கை எடுத்திருந்ததாக தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் விசாரணையின்போது வெளிப்படுத்தப்பட்டமை.

(xi) பொலிஸ் உத்தியோகத்தர்களினால் தவறிழைக்கப்பட்டதாக தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் விசாரணையின்போது வெளிப்படுத்தப்படும் போது அதன் பிரகாரம் மேற்கொள்ளப்பட்ட அறிவித்தல்களின் அடிப்படையில் பொலிஸ் மா அதிபரால் ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுத்தல்.

**10.6 வினைத்திறனற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

-----------------------------------------------------------------------

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் பதினேழாவது உறுப்புரைக்கான திருத்தத்தின் பிரகாரம் உருவாக்கப்பட்ட தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் அதிகாரங்கள் பதினெட்டாவது உறுப்புரையின் திருத்தத்தினால் வலுவிழந்திருந்தது. அதன் காரணமாக, மீளாய்வாண்டின்போது தேசிய பொலிஸ் ஆணைக்குழு செலவிட்டிருந்த ரூபா 42,938,271 கூட்டுத் தொகையான மீண்டெழும் மற்றும் மூலதன செலவினங்களின் அளவை உரிய வினைத்திறனுடன் பயன்படுத்துவதற்கு முடியாதிருந்தது.

## 10.7 மனிதவள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 15 | 15 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 03 | - | 03 |
| (iii) | இரண்டாம் நிலை | 33 | 27 | 06 |
| (iv) | ஆரம்ப நிலை | 13 | 12 | 01 |
| | | 64 | 54 | 10 |

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

உள்ளபடியான ஊழியர் எண்ணிக்கையில் அமைய மற்றும் ஒப்பந்த அடிப்படையிலான 13 சிரேஷ்ட நிலை உத்தியோகத்தர்களும் 02 இரண்டாம் நிலை உத்தியோகத்தர்களும் உள்ளடங்கியிருந்தனர்.